# மாகாணக்கல்வித்திணைக்களம் வடக்கு மாகாணம்

க.பொ.த உயர்தர முன்னோடிப் பரீட்சை - 2021

## Provincial Department of Education Northern Province

## G.C.E.(A/L) Pilot Examination

கிறிஸ்தவ நாகரிகம் I
Christian Civilaization I

Three Hours

Gr -13 (2021)

49 | T | I


### பகுதி – I

❖ *எல்லா வினாக்களுக்கும் விடை தருக.*

1. பழங்கால மனிதர் ஒருவரோடொருவர் கூடி வாழும் முறையை கி.மு. 40 000 ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பித்திருந்தாலும் நாகரிகத்தைக் குறித்துப் பேசப்படக் கூடிய காலம்
   (1) கி.மு. 3000 ஆண்டுகள் (2) கி.மு. 5000 ஆண்டுகள்
   (3) கி.மு. 8000 ஆண்டுகள் (4) கி.மு. 30000 ஆண்டுகள்
   (5) கி.மு. 9000 ஆண்டுகள்

2. முக்கோண வடிவமைப்பைக் கொண்ட படிமுறை அதிகார அமைப்பு முறையில் அடிமட்டத்தில் உள்ளவர்களாகக் காணப்படுகின்றவர்கள்
   (1) அடிமைகள் (2) குருக்கள் (3) திருத்தொண்டர்கள்
   (4) பொதுநிலையினர் (5) தாழ்த்தப்பட்டோர்

3. எசாயா, மீக்கா இறைவாக்கினர்கள் பணிபுரிந்த காலத்தில் ஆட்சி புரிந்த மன்னனும், இடமுமாகக் கருதப்படுவது
   (1) யோசபாத்து, வடஅரசு (2) ஆகாப், தென்னரசு (3) அமட்சியா, பாபிலோனியா
   (4) ஏலா, வடஅரசு (5) ஆகாசு, தென்னரசு

4. பாபிலோனியாவில் நாடுகடத்தப்பட்ட காலத்தில் இஸ்ரயேல் மக்கள் பழகிக் கொண்ட மொழி
   (1) கிரேக்க மொழி (2) எபிரேய மொழி (3) அரமேய மொழி
   (4) இலத்தின் மொழி (5) மசரோட்டிக் மொழி

5. ஆசியாக் கண்டத்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள பாலஸ்தீனாவின் கிழக்கே அமைந்துள்ளது
   (1) அராபியப் பாலைவனம்
   (2) இதுமேயாப் பாலைவனம்
   (3) மத்தியதரைக் கடல
   (4) லெபானான் மலைத்தொடர்
   (5) சீன் பாலைவனம்

6. சீனாய் மலையில் இறைவன் இஸ்ரயேல் மக்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கை பற்றிய விபரிப்பு
   (1) எநுமா எலிஸ் என்ற புராதன இலக்கியங்களில் வரும் உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டது
   (2) புராதன இத்தியர் அசீரியர் ஆகிய கீழைத்தேச நாடுகளில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டது.
   (3) எகிப்தில் நிலவிய கி.மு. 14ஆம், 13ஆம் நூற்றாண்டில் நிலவிய நடைமுறையை ஒத்தது.
   (4) கிரேக்கர் தாம் கைப்பற்றிய நாடுகளில் செய்து கொண்ட உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டது.
   (5) கி.மு.12–10நூற்றாண்டுகளில் பேரசர்களுக்கும், சிற்றரசர்களுக்கும் இடையே செய்து கொள்ளும் உடன்படிக்கையை ஒத்தது.

7. எகிப்திய தளபதி தாலமியிடமிருந்து பலஸ்தீனாவைக் கைப்பற்றிய மன்னன் யார்?
   (1) பாரசீக மன்னன் மூன்றாம் தாரியு
   (2) சீரிய மன்னன் மூன்றாம் அந்தியோக்கு
   (3) மகா அலெக்சாண்டர்
   (4) அசீரிய மன்னன் எத்கிளார் பலசார்
   (5) சீரிய மன்னன் நான்காம் அந்தியோக்கு

8. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக
   A - பாவிப்பெண்ணொருவர் இயேசுவின் காலடிகளை நறுமண தைலத்தால் பூசியமை
   B - இயேசு தமது முதல் அருளடையாளத்தை நிறைவேற்றியமை
   C - இயேசு தமது பாடுகள் மரணத்தை எதிர்கொள்ள முன் தந்தையை நோக்கிச் செபித்தமை
   D - தீய ஆவி பிடித்தவரைக் குணமாக்கியமை
   E – பேதுருவின் மாமியாரின் காய்ச்சலைக் குணமாக்கியமை
   இவற்றுள் பாலஸ்தீனாவின் பிரதான நிலப்பகுதியாகிய கலியேயாவுடன் பொருந்தும் கூற்றுக்களாவன
   (1) A, B, C
   (2) B, D, E
   (3) C, D, E
   (4) A, B,E
   (5) B, C, D

9. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
   A – தெபோரா இஸ்ரயேல் மக்களைக் கானானிய மன்னனிடமிருந்து காப்பாற்றினார்
   B – பாரசீக மன்னன் 604இல் பலஸ்தீனாவைக் கைப்பற்றித் தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தார்
   C – யோயாக்கீம் யூதாவை ஆட்சி செய்த காலத்தில் நெபுகத்னேசர் யூதாவின் முக்கியமான சிலரை நாடு கடத்தினான்
   D –கிரேக்க ஆட்சிக் காலமானது சதுசேயர் தோற்றம் பெற்ற காலமாகக் கொள்ளப்படுகின்றது
   E – பாபிலோனியாவில் ஆறுதலின் இறைவாக்கினர் என்றழைக்கப்படும் எசாயா பணிபுரிந்தார்
   இவற்றுள் சரியான கூற்றுக்கள் யாவை?
   (1) B, C, D
   (2) A, D, E
   (3) C, D, E
   (4) A, B, E
   (5) A, C, D

10. சாலமோனின் ஞானத்தின் சிறந்த வெளிப்பாடாக அமைந்தமை
   (1) யாவே மரபு தோற்றம் பெற்றமை
   (2) தன் ஆட்சிக்கு குந்தகம் விளைவித்தவர்களைத் தோற்கடித்து நாட்டில் அமைதியை ஏற்படுத்தியமை
   (3) எருசலேம் ஆலயத்தை அழகுற வடிவமைத்தமை
   (4) சிறந்த இலக்கியங்கள் உருவாகியமை
   (5) சேபா நாட்டு அரசியின் சோதனையை வெற்றி கொண்டமை

11. பின்வரும் கூற்றுக்களுடன் தொடர்புடைய யூதமத நிறுவனமானது
   - பலிப்பீடத்தைக் காணமுடியாது
   - விளக்குத்தண்டுகள் பாவனையில் வைக்கப்பட்டிருக்கும்
   - நீதி விசாரணை மன்றமாகப் பயன்படுத்தப்படும்
   (1) எருசலேம் ஆலயம்
   (2) மறைப்பாடசாலை
   (3) சினகொக்
   (4) செனத்திரின் சங்கம்
   (5) கல்மேடை

12. மெசியாவின் வருகைக்காகக் காத்திருப்பதை விடுத்து தாமே நேரடியாக விடுதலை அடைய வேண்டும் எனும் நோக்கில் செயற்பட்ட குழுவினர்
   (1) பரிசேயர்
   (2) சதுசேயர்
   (3) மறைநூல் அறிஞர்
   (4) எசீனியர்
   (5) தீவிரவாதிகள்

13. என் ஆண்டவர், முதலும் முடிவுமற்ற இறைவன், உடன்படிக்கையின் இறைவன், உன்னதரான இறைவன் ஆகிய இறைவனின் பண்புகளைக் குறிக்கும் பெயர்களைக் கொண்ட ஒழுங்கு முறையாவன
   (1) ஏல் எலோகிம், ஏல் ஏலியோன், ஏல் சடாய், எல் பெரித்
   (2) அதோனாய், யாவேயீரே, ஏல் பெரித், ஏல் ஏலியோன்
   (3) ஏல் சடாய், யாவேயீரே, ஏல் பெரித், அதோனாய்
   (4) ஏல் ஏலோகிம், அதோனாய், ஏல் பெரித், ஏல் சடாய்
   (5) அதோனாய், ஏல் பெரித், ஏல் சடாய், யாவேயீரே

14. இஸ்ரயேல் மக்களின் வழிபாடுகளில் முக்கியத்துவம் பெற்ற விடயம் பலி செலுத்துவதாகும். இப்பலிகள் தொடர்பாகக் கொண்டிருந்த கருத்துக்களில் பொருத்தமற்றது
(1) இப்பலிகள் மூலம் பலிசெலுத்தப்படும் நபர் உயர்வடைவார்
(2) இப்பலிகள் மூலம் இறைவனுடன் மனிதர் கொண்டுள்ள அன்பின் வெளிப்பாடு எனக் கருதியமை
(3) இப்பலிகள் மண்ணும் மக்களும் இறைவனுக்குச் சொந்தம் என்பதைக் காண்பிக்கும் எனக் கருதியமை
(4) இப்பலி மூலம் மனிதர் புனிதம் அடைகின்றனர்
(5) இப்பலி கடவுளுக்கு மனிதர் அளிக்கும் உடன்பாடாகும்

15. யூதர்களின் ஏழாம் மாதமான திஸ்ரி மாதத்தில் கொண்டாடப்படும் விழாக்களாவன
(1) கூடாரத்திருவிழாவும், பாவக்கழுவாய்ப்பலி விழாவும்
(2) பெந்தக்கோஸ்தே விழாவும், கூடாரத்திருவிழாவும்
(3) பாஸ்காத்திருவிழாவும், கூடாரத்திருவிழாவும்
(4) பாவக்கழுவாய்ப்பலி விழாவும், ஆலய அர்ப்பண விழாவும்
(5) கூடாரத் திருவிழாவும், ஆலய அர்ப்பண விழாவும்

16. யூதசட்டங்களைக் கடந்து நேர்மைக்கும், உண்மைக்கும் முதலிடம் அளிக்க வேண்டும் என்ற மனப்பாங்கை இயேசு யாரிடமிருந்து பெற்றுக் கொண்டார்?
(1) தாய் மரியாளிடம் காணப்பட்ட இறைநம்பிக்கையிலிருந்து
(2) யூதசட்டங்களைக் கற்றறியும் மறைப்பாடசாலையிலிருந்து
(3) நாசரேத்து தொழுகைக் கூடத்தில் வாசித்த ஏட்டுச்சுருளில் காணப்பட்ட இறைவார்த்தையிலிருந்து
(4) வளர்ப்புத் தந்தையாகிய யோசேப்பிடமிருந்து
(5) திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப் பெற்றபோது ஏற்பட்ட அப்பா அனுபவத்தின் மூலமாக

17. மலைப்பொழிவில் இயேசுவினால் விதந்துரைக்கப்பட்ட யூதமதத்தின் முக்கிய மூன்று தூண்களாவன
(1) தருமம், இறைவேண்டல், நோன்பு
(2) இறைவேண்டல், நோன்பு, பரித்தியாகம்
(3) இறைவேண்டல், பரித்தியாகம், தருமம்
(4) நோன்பு, தவம், தருமம்
(5) தருமம், நோன்பு, பரித்தியாகம்

18. மலைப்பொழிவின் சிகரமாகவும், முடிவுரையாகவும் அமையும் பொன்விதி தொடர்பாக யூதராபிகளின் மரபில் காணப்படுவது
(1) பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டுமென விரும்புகின்றவற்றை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்
(2) உனக்கு அடுத்திருப்பவரிடம் அன்பு கூர்வாயாக
(3) உனக்குப் பிடிக்காத எதையும் பிறருக்குச் செய்யாதே
(4) உன் ஆண்டவராகிய கடவுளை நோக்கி மன்றாடு
(5) பிறர் உனக்கு தொந்தரவாயிருந்தால் அவர்களிடமிருந்து உன் உறவை முறித்துவிடு

19. இயேசுவின் பிரதான படிப்பினையாகிய “தலைவன் பணியாளனாக வேண்டும்” என்பதை அவர் எச்சந்தர்ப்பத்தில் உறுதிப்படுத்துகின்றார்?
(1) தூய்மையும் கீழ்ப்படிதலும் ஆகும்
(2) பணிவும் அன்பும் ஆகும்
(3) தோற்றம் மாறிய போதாகும்
(4) இறுதி இராவுணவின் போதாகும்
(5) விண்ணேற்பின் போதாகும்

20. தூய லூக்காவிற்கு இயேசுவின் சிலுவை மரணமானது
(1) மீட்பின் வெளிப்பாடாகும்
(2) வெற்றியின் வெளிப்பாடாகும்
(3) அன்பின் உச்ச செயற்பாடாகும்
(4) இறைமாட்சியின் வெளிப்பாடாகும்
(5) துன்புறுதலின் வெளிப்பாடாகும்

பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி 21-23 வரையான வினாக்களுக்கு விடை தருக.

| | | |
|---|---|---|
| A – கி. பி. 46 - 49 | B – இக்கோனியா | C – பிரியாவிடை உரையாற்றுதல் |
| C – லூக்கா | D - சைப்பிரஸ் | E - விருத்தசேதனம் செய்தல் |
| F - கி. பி. 54 - 58 | G – மிலேத்து | H – இருகட்சியாக மக்கள் பிளவுபடுதல் |
| I- திமோத்தேயு | J - லிஸ்திரா | K- பர்ணபாவின் பிறப்பிடம் |

21. பவுலின் முதலாம் தூதுரைப் பயணத்துடன் தொடர்புடைய நிகழ்வுகளாவன
(1) A,E (2) A,K (3) E,K
(4) H,K (5) E,H

22. A, F கூற்றினால் குறிப்பிடப்படும் காலங்களைக் குறிக்கும் பவுலின் பயணங்களாவன
(1) முதலாம், இரண்டாம் பயணங்கள் (2) இரண்டாம், மூன்றாம் பயணங்கள்
(3) மூன்றாம், உரோமைப் பயணங்கள் (4) முதலாம், மூன்றாம் பயணங்கள்
(5) இரண்டாம், உரோமைப் பயணங்கள்

23. பவுலின் இரண்டாம் மறைத்தூதுப் பயணத்துடன் தொடர்புடையவை
(1) A,C,E (2) A, J,K (3) C,E,I
(4) C,K ,I (5) E,F,H

24. கிறிஸ்தவம் யூத எல்லைகளுக்கு வெளியே தோன்றிய கலாசாரத்தில் வளர்வதற்கு வழிவகுத்த சங்கம்
(1) எருசலேம் சங்கம் (2) கல்சடோன் சங்கம் (3) திரிதெந்தீன் சங்கம்
(4) முதலாம் வத்திக்கான் சங்கம் (5) இரண்டாம் வத்திக்கான் சங்கம்

25. பெற்றோருக்குச் சரியான முறையில் கொடுக்க வேண்டிய மதிப்பையும், கவனிப்பையும் அன்பையும் செலுத்துவதன் மூலம்
(1) பிள்ளைகள் தங்கள் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவது எடுத்துக்காட்டப்படுகிறது.
(2) தமதும் ஏனையோரினதும் மீட்பிற்கு வழிவகுத்துக் கொள்வர்
(3) கிறிஸ்துவின் மீட்புத்திட்டத்தில் பங்காளிகளாவர்
(4) நீண்ட ஆயுளைப் பெறுவதாகப் பத்துக் கட்டளைகள் எடுத்துக் காட்டுகின்றன
(5) அனைத்து முயற்சிகளிலும் வெற்றி அடைவதாக எடுத்துக் காட்டப்படுகிறது.

26. பிலிப்பியர் 2: 5-11 திருமடலில் எடுத்துக்காட்டப்படும் கிறிஸ்துவின் வாழ்வில் மேலோங்கிக் காணப்படும் பண்புகளாவன
(1) தூய்மையும் கீழ்ப்படிதலும் ஆகும்
(2) பணிவும் அன்பும் ஆகும்
(3) அன்பும் கீழ்ப்படிதலும் ஆகும்
(4) ஏழ்மையும் கீழ்ப்படிதலும் ஆகும்
(5) பணிவும் கீழ்ப்படிதலும் ஆகும்

27. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக
A – இயேசுவின் இறைஇயல்பிற்கு முக்கியத்துவம் கொடுத்தனர்
B – இறையியலை விளக்க அரிஸ்டோட்டலின் மெய்யியலைப் பயன்படுத்தினர்
C – திருவிவிலியத்தை விளக்க நேர்ப்பொருள் உட்கருத்து விளக்கும் முறையைப் பின்பற்றினர்
இவற்றுள் அந்தியோக்கிய மறைக்கல்விக் கூடத்தின் சிறப்பம்சங்களாவன
(1) C மட்டும் (2) A மட்டும் (3) A, C
(4) B, C (5) A, B,C ஆகிய மூன்றும்

28. சத்தியத்தின் பாதுகாவலர்களுள் புனித ஜஸ்ரின் பின்வருவனற்றுள் எத்தகைய சிறப்பான பெயரைப் பெற்றுள்ளார்?
(1) முதன்மையான பெரிய கிறிஸ்தவ எழுத்தாளர்
(2) உண்மையான அறிவாளி
(3) இறையியல் இலத்தீன் மொழியின் தந்தை
(4) உலகின் ஒளி
(5) இறையியல் மாமேதை

29. திருப்பலியில் சொல்லப்படும் தூய ஆவி கடவுள் என்ற விசுவாச சத்தியத்தை நிசேயா நம்பிக்கைக் கோட்பாட்டுடன் சேர்த்த சங்கம்
(1) எருசலேம் பொதுச்சங்கம்
(2) கல்சடோன் பொதுச்சங்கம்
(3) கொன்ஸ்தாந்திநோபிள் பொதுச்சங்கம்
(4) எபேசு பொதுச்சங்கம்
(5) கார்த்தேஜ் பொதுச்சங்கம்

30. திருச்சபையின் வரலாற்றில் ஏழாம் நூற்றாண்டு தொடர்பாகத் தவறான கூற்றைத் தெரிவு செய்க.
(1) அலஸ்தர் பட்டணத்தில் மிகப்பலம் படைத்த தலைவனாயிருந்த திக்சு மனந்திரும்பியது
(2) கிறிஸ்தவ இராச்சியம் ஒன்று உருவாகியது
(3) கிறிஸ்தவக் கலையில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன
(4) இஸ்லாம் மதமும் அதனுடைய போர்களும் பேரரசிற்குப் பேரழிவை ஏற்படுத்தின
(5) இறையியலில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன

31. கி.பி. 1054 இல் கிழக்கு மேற்கு சபைகளுக்கிடையே பிளவு ஏற்பட்டபோது திருத்தந்தையைப் போன்று தானும் சரிநிகர் என்று உரிமை கொண்டாடியவர் யார்?
(1) திருத்தந்தை 9 ஆம் லியோ
(2) கொன்ந்தாந்திநோபிள் பிதாப்பிதா மைக்கல் செலாரியுஸ்
(3) திருத்தந்தை 11 ஆம் பத்திநாதர்
(4) திருத்தந்தை யூஜின் செலாரியுஸ்
(5) கொன்ந்தாந்திநோபிள் பிதாப்பிதா மசதோனியஸ்

32. திருச்சபையின் தந்தையோர் எனப்படுவோர்
(1) தொடக்கத் திருச்சபையின் இறையியலாளர்கள்
(2) தொடக்கத் திருச்சபையில் மூப்பர்களாகச் செயற்பட்டவர்கள்
(3) திருத்தூதர்களும் மூப்பர்களும்
(4) தொடக்கத் திருச்சபையின் தலைவர்கள்
(5) கலாபனைக் காலத்தில் நம்பிக்கையூட்டியவர்கள்

33. குளுணி, சிஸ்ரேஷியன் சபைகள் தோற்றம் பெறக் காரணமானவை
(1) தப்பறையான போதனைகளிலிருந்து மக்களை விழிப்புணர்வு பெறச் செய்தல்
(2) ஆரம்ப காலங்களில் துறவற வாழ்வில் நிலவிய சட்ட ஒழுங்குகளைக் கட்டிக் காத்தல்
(3) புனித பெனடிக்ற்றின் ஒழுங்குகள் பிரமாணிக்கமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்பதற்கு
(4) திருச்சபையானது மறை, ஆன்மீக விடயங்களுக்கு அப்பால் லௌகீக காரியங்களில் ஈடுபட்டமை
(5) 12ஆம் 13ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்கள்

34. எட்டாம் ஹென்றி அரசர் தான் ஒரு பிரிவினைவாதி என்பதை ஏற்றுக் கொண்டாலும் கிறிஸ்தவ மதப் பாரம்பரியங்களுக்குப் பிரமாணிக்கமாக இருந்தார் என்பதற்கான சான்று
(1) ஏழு அருட்சாதனங்களின் இயல்புகள் என்ற நூலை வெளியிட்டமை
(2) கிறிஸ்தவ மதக் கோட்பாடுகள் என்ற சட்டத்தைப் பிரகடனம் செய்தமை
(3) ஆறுகோட்பாடுகள் என்ற சட்டத்தைப் பிரகடனம் செய்தமை
(4) கத்தோலிக்க திருச்சபையின் திருப்பலி வழிபாட்டு முறையின் அமைப்பைப் பின்பற்றியமை
(5) குழந்தைகள் திருமுழுக்கை ஏற்றுக் கொண்டமை

35. கல்வினின் போதனைகளுள் மிகவும் முக்கியமானது
(1) குழந்தைகள் திருமுழுக்கு
(2) இறந்தவர்களின் உயிர்ப்பு
(3) முன்குறித்து வைத்தல்
(4) திருவிவிலியமும் தொடரும் இறைவெளிப்பாடும்
(5) பெண்விடுதலை

36. கார்மேல் சபைத் துறவியான அவிலா திரேசா பெண்கள் கார்மேல் சபையில் சீர்திருத்தத்தை ஆரம்பித்தது
(1) தனது 25 ஆண்டுகள் துறவற வாழ்க்கை அனுபவத்துடன்
(2) புனித பிரான்சிஸ் அசீசியின் சட்ட ஒழுங்குகளை மிக நுணுக்கமாகக் கடைப்பிடித்தமையால்
(3) துறவியரின் கடுந்தவ முயற்சிகளைக் குறைக்கும் நோக்கத்துடன்
(4) கிறிஸ்துவின் மறைநிகழ்ச்சிகளைத் தியானிக்கும் முறையைக் கற்றுக் கொடுப்பதற்காக
(5) இலக்கிய நூல்களின் வழியாக சீர்திருத்தத்தை மேற்கொள்ளும் முகமாக

37. ஐரோப்பிய பழங்குடியினரைச் சீர்ப்படுத்தும் நோக்கில் ஐரோப்பிய நாகரிகத்திற்கு வழிவகுத்து கல்விப் பணியாற்றியவர்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுள் சரியான சோடியை இனங்காண்க
(1) ஜேர்மனி - புனித பொனிபாஸ்
(2) அயர்லாந்து - புனித கொலம்பா
(3) இங்கிலாந்து - புனித கன்ரபெரி அகஸ்தினார்
(4) டென்மார்க் - புனித ஆன்ஸ்கா
(5) பிரான்ஸ் - புனித டொமினிக்

38. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக
A – பொஸ்டன் நகரில் செவிப்புலனற்ற பிள்ளைகளுக்கான கல்லூரி ஒன்று உருவாக்கப்பட்டது
B – பௌதீகத்திற்கான நோபல் பரிசினைப் பெற்றவர்
C – நவீன யுகத்தின் தத்துவஞானியான இவர் இங்கிலாந்தில் பிறந்தவர்
D – திருவிவிலியத்தில் உள்ளவற்றை விஞ்ஞானத் தரவுகளினூடாக ஆய்வு செய்தவர்
E – இவரால் கண்டுபிடிக்கப்பட்ட தொலைபேசிக் கருவியினூடாக முதன்முறையாகச் செய்தி பரிமாறப்பட்டது
இவற்றுள் அலெக்சாண்டர் கிரஹம்பெல், சேர் ஐசாக் நியூட்டன் ஆகியோருடன் பொருந்தாதது
(1) A (2) B (3) C
(4) D (5) E

39. யாருடைய தாக்குதலினால் உரோமை நகரம் கைப்பற்றப்பட்ட போது அதன் அழிவிற்குக் காரணம் கிறிஸ்தவர்களே என்ற குற்றச்சாட்டிற்குக் கூறும் பதிலாக தூய அகஸ்தினாரின் இறைவனின் நகரம் என்ற நூல் அமைந்துள்ளது?
(1) அட்டில்லா என்னும் ஹன்ஸ் கோத்திரத்தாரின்
(2) வண்டல் கோத்திரத்தாரின்
(3) பிராங்கோ இனத்தாரின்
(4) விசிகோத்து இனத்தாரின்
(5) சக்ஸ்சோனியர் இனத்தாரின்

40. பின்வருவனற்றைக் கவனத்திற் கொள்க
A - கூரான முகப்பு
B – உருளை வடிவிலான வில்லுகள்
C – நிறக்கண்ணாடிப் பாவனை
D – தூணோ, சாய்தளமோ இல்லை
E – நீர்க்குமிழி போன்ற கூரை
மேற்குறித்தவற்றுள் பைசாந்திய ஆலய அமைப்பின் சிறப்பம்சங்களாவன
(1) A, D (2) A, E (3) B, E
(4) C,D (5) D, E

41. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
- பார்ப்போரின் மனதை சஞ்சலப்படுத்துகின்றது
- வரையப்பட்ட மனிதர்களின் தோற்றம் அமைதியற்ற நிலையில் இருப்பது போலக் காட்சியளிக்கிறது.

மேற்கூறப்பட்ட கூற்றுக்களைக் குறிப்பது.
(1) உலகப்படைப்பு (2) பரிசுத்த குடும்பம் (3) மெடோனா
(4) மொனாலிசா (5) இறுதித் தீர்ப்பு

42. இந்தியாவிற்கு வெவ்வேறு காலகட்டங்களில் கிறிஸ்தவம் கொண்டு வரப்பட்டதாகும். அந்தவகையில் 16ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் மறைபரப்புப் பணியாற்றிய முதற் துறவியர்
(1) கார்மேல் சபையினர்
(2) இயேசு சபையினர்
(3) டொமினிக்கன் சபையினர்
(4) ஆசீர்வாதப்பர் சபையினர்
(5) பிரான்சிஸ்கன் சபையினர்

43. காசியப்பர், மொகல்லான என்ற அரசர்களின் காலத்தில் கிறிஸ்தவப் படைவீரர்கள் இலங்கையில் இருந்திருக்கின்றனர் என்ற கருத்தை முன்வைத்தவர்
(1) கொஸ்மஸ் இன்டிக்கோ பிளாஸ்தர் ஆவார்
(2) பேராசிரியர் செனரத் பரணவிதான ஆவார்
(3) மிகார சேனாதிபதி ஆவார்
(4) பெஞ்சமின் ரபாய் ஆவார்
(5) ஏ. ஆர். அயர்டன் ஆவார்

44. பின்வரும் பெயர்களைக் கவனத்திற் கொள்க
A – தயோ கோ மா குன்கவின் அடிகளார்
B – யுவான் டி லிஸானோ அடிகளார்
C – பார்த்தலோமே சம்பாயோ அடிகளார்
D – பிறே வின்சன்றே அடிகளார்
E – இக்னேசியுஸ் கொன்ஸ்தாந்தினு த கா அடிகளார்
போர்த்துக்கேயர் காலத்திலே அத்தனகல்ல, மாபிடிகம, வலிவேரி, நாரஹென்பிட்டி போன்ற இடங்களில் ஆலயங்கள் கட்டப்படுவதற்கு காரணமானவர்கள்
(1) A, D (2) A, E (3) B, E
(4) C,E (5) B, D

45. ஐரோப்பியரின் வருகையின் பின்னர் எப்பாடசாலை முறையில் கட்டாயக்கல்வி, மேற்பார்வை முறை என்பன முக்கிய இடத்தைப் பெற்றது?
(1) கோவிற்பற்றுப் பாடசாலை முறையில்
(2) செமினரிப் பாடசாலை முறையில்
(3) ஒல்லாந்தப் பாடசாலை முறையில்
(4) அரசாங்கப் பாடசாலைகளில்
(5) உயர்கல்லூரிகளில்

46. திருவிவிலியத்தின் சிங்கள மொழிபெயர்ப்பும் மக்கள் மத்தியில் பரவச் செய்தலும் எந்த ஆட்சிக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது?
(1) போர்த்துக்கேயர்
(2) ஆங்கிலேயர்
(3) பாரசீக
(4) சிங்கள
(5) ஒல்லாந்தர்

47. தொழிலாளர் நிலைமை என்ற சுற்றுமடலின் 90 வது நிறைவு தினத்தை முன்னிட்டு எச்சுற்றுமடல் யாரால் எழுதப்பட்டது?
(1) சமூக ஒழுங்கமைப்பு - திருத்தந்தை 11 ஆம் பயஸ்
(2) நூறாவது ஆண்டு - திருத்தந்தை 2 ஆம் யோவான் பவுல்
(3) மனித உழைப்பு - திருத்தந்தை 2 ஆம் யோவான் பவுல்
(4) அவனியில் அமைதி - திருத்தந்தை 23 ஆம் யோவான்
(5) அன்னையும் ஆசிரியையும் - திருத்தந்தை 23 ஆம் யோவான்

48. கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான 2 ஆம் வத்திக்கான் சங்கப்படிப்பினைகள் குறித்து தவறான கருத்தைத் தெரிவு செய்க
(1) கிறிஸ்துவே அனைவருக்கும் ஒன்றிப்பின் மையம்
(2) இயேசுவின் ஆவி அனைத்துச் சபைகளிலும் செயற்படுகின்றார்
(3) இயேசுவின் வழியாக அருளப்படும் மீட்பு வாழ்வே அனைவரும் தேடியடையும் வாழ்வாகும்
(4) கிறிஸ்தவப் பிளவுக்கு இருசாராருமே பொறுப்பு
(5) அனைத்துக் கிறிஸ்தவ திருச்சபைகளின் கிறிஸ்தவர்கள் 'ஆண்டவரில் இவர்கள் சகோதரர்கள்' என அழைக்கப்படுகின்றனர்

49. கொழும்பு மறைமாவட்டத்திலுள்ள அக்குவைனஸ் கல்லூரியை ஆரம்பித்தவர்
(1) டொன் பீற்றர் அடிகள்
(2) பீற்றர்பிள்ளை அடிகள்
(3) கிறிஸ்தோப்பர் பொஞ்சின் அடிகள்
(4) ஆயர் எட்மன் பீரிஸ்
(5) எஸ். ஜி. பெரேரா

50. பின்வருவனற்றைக் கவனத்திற் கொள்க

A –பிற சமயங்கள் மரபுகள் மீதான மதிப்பினை வளர்த்தல்

B – பிற மதத்தவர் பற்றிய திறந்த மனம் கொண்டிருத்தல்

C – பிற மதத்தவர்களுக்கு காது கொடுத்துக் கேட்டல்

D - பிற மதத்தவர்களை மதித்து புரிந்து கொள்ளல்

E – பிற சமயங்களில் காணப்படும் அருள்வரங்களைக் கண்டு பாதுகாத்தல்

மேற்குறிப்பிட்ட கூற்றுக்களில் பல்சமய உறவு குறித்து இரண்டாம் வத்திக்கான் சங்கப் படிப்பினைகளையும், ஆசிய ஆயர் மன்றப் படிப்பினைகளையும் இனங்காண்க.

(1) A, D – B, C. E (2) A, B – C, D, E (3) B, E – A, C, D
(4) A,E - B,C,D (5) B,D – A,C,E

# மாகாணக்கல்வித்திணைக்களம் வடக்கு மாகாணம்

க.பொ.த உயர்தர முன்னோடிப் பரீட்சை - 2021

# Provincial Department of Education Northern Province

# G.C.E.(A/L) Pilot Examination

| | | | | |
|---|---|---|---|---|
| **கிறிஸ்தவ நாகரிகம் II**<br>**Christian Civilization II** | **Three Hours**<br>**Gr -13 (2021)** | **49** | **T** | **II** |

*(மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்)*

❖ **பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி – I

1. (i) யூதநாகரிகத்தில் செல்வாக்குச் செலுத்திய யூப்பிரட்டிஸ் தைகிறிஸ் நாகரிகத்தின் நான்கு பண்புகளைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

   (ii) கிறிஸ்தவத்தில் கிரேக்க நாகரிகத்தினால் ஏற்பட்ட செல்வாக்குகள் நான்கினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

   (iii) கி.பி. 313 இல் ஏற்பட்ட மத சுதந்திரத்திற்குப் பின்னர் தோற்றம் பெற்ற ஆலயங்களில் பின்பற்றப்பட்ட இருவகையான கட்டிடக்கலையின் பிரதான அம்சங்களை விபரிக்குக. (6 புள்ளிகள்)

   (iv) திருவிவிலியத்தில் கிரேக்க, இலத்தீன் மொழி ஏற்படுத்திய செல்வாக்கினை விபரிக்குக. (8 புள்ளிகள்)

2. (i) இயேசுவின் காலத்தில் யூத சமூகத்தில் தாழ்த்தப்பட்டோராகக் கருதப்பட்ட குழுவினர் நால்வரைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

   (ii) யூதர்களின் வழிபாட்டில் முதலிடம் பெறும் பலிகளில் இரண்டினைச் சுருக்கமாக விபரிக்குக. (4 புள்ளிகள்)

   (iii) இயேசுவைச் சிலுவையில் அறைதல் தொடர்பாக நற்செய்தியாளர் யோவான் முன்வைக்கும் முக்கிய விடயங்களை விளக்குக. (6 புள்ளிகள்)

   (iv) உயிர்ப்புத் தொடர்பாக யூதர்கள், நற்செய்தியாளர்கள் கொண்டிருந்த வேறுபாட்டை விளக்கி, இயேசுவின் உயிர்ப்புப் பற்றிய ஒளியில் விளக்குக. (8 புள்ளிகள்).

3. (i) இன்றைய உலகில் திருச்சபை என்ற ஏட்டில் மனிதசமூகம் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகள் நான்கினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

   (ii) திருமணம் - குடும்ப வாழ்வின் மனித மாண்பைப் பேணிவளர்த்தல் தொடர்பாக இரண்டாம் வத்திக்கான் சங்கம் முன்வைக்கும் விடயங்கள் நான்கு தருக. (4 புள்ளிகள்)

   (iii) கிறிஸ்தவம் பிளவுபட்டதற்கான காரணங்களையும், வரலாற்றில் கிறிஸ்தவம் பிளவுபட்ட நிலைகளையும் விளக்குக. (6 புள்ளிகள்)

   (iv) கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான முயற்சிகளை விபரிக்குக. (8 புள்ளிகள்)

## பகுதி 11

4. (i) கிறிஸ்தவ சமுதாயத்தில் வேறுபடுத்திக் காட்டக்கூடிய தொடக்ககால கிறிஸ்தவர்களின் குழமவாழ்வு பற்றி விளக்குக.

   (ii) இன்றைய சமுதாயத்தில் தொடக்ககால கிறிஸ்தவர்களின் பண்புகளை நடைமுறைப்படுத்துவதாயின் முகம் கொடுக்க நேரிடும் சவால்களை விளக்குக.

(10x2=20 புள்ளிகள்)

5. (i) வேலை மட்டில் பெனடிக்ற் சபைத் துறவிகளின் மனப்பாங்கை விளக்குக.

   (ii) ஐரோப்பாவில் கல்வி வளர்ச்சிக்கு ஆச்சிரம, துறவற சபைகளின் பங்களிப்பை விளக்குக.

(10x2=20 புள்ளிகள்)

6. (i) பிலிப்பியருக்கு எழுதிய மடலில் பவுல் குறிப்பிட்டுள்ளபடி கிறிஸ்துவின் தாழ்ச்சி பற்றிக் கூறும் படிப்பினைகள் ஐந்தினை விளக்குக.

   (ii) கிறிஸ்தவ சகோதரத்துவத்திற்கு அடிப்படையாக விளங்கும் அன்பின் தன்மை, இயல்பு ஆகிய பண்புகளைப் பவுல் கொரிந்தியர் சமூகத்திற்கு எவ்விதம் முன்வைக்கின்றார்?

(10x2=20 புள்ளிகள்)

7. (i) ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் கல்வித்துறையில் ஏற்பட்ட மாற்றங்களை விபரிக்குக.

   (ii) இன்றைய காலகட்டத்தில் கல்வியை முன்னெடுக்க மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்களையும், இச்சவால்களை வெற்றிகரமானதாக்கிக் கொள்ள முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும் கலந்துரையாடுக.

(10x2=20 புள்ளிகள்)

8. (i) பல்சமய உறவுக்கான இரண்டாம் வத்திக்கான் சங்க, ஆசிய ஆயர்கள் மன்றப் படிப்பினைகளை விளக்குக.

   (ii) இலங்கை போன்ற பல்சமய சமூகத்தில் சமய ஒருமைப்பாட்டின் முக்கியத்துவத்தையும், சமய உரையாடலுக்குத் தேவையான காரணிகளையும் விளக்குக.

(10x2=20 புள்ளிகள்)